RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2425

OPEN ACCESS

# புதுக்கவிதையில் பெண்ணியம்

வி. இமயராஜா [அ, *]

[அ] தமிழ்த்துறை, நாசரேத் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஆவடி, சென்னை- 600062, தமிழ்நாடு, இந்தியா.

# Feminism in Puthu Kavithai

V. Imayaraja [a, *]

[a] Department of Tamil, Nazareth College of Arts and Science, Aavadi, Chennai-600062, Tamil Nadu, India

* Corresponding Author: imayarajanc@gmail.com

Received: 15-12-2023
Revised: 10-03-2024
Accepted: 16-03-2024
Published: 05-04-2024

Check for updates

## ABSTRACT

Women's rights are related to human rights and poetry is a record of women's rights. The poems are about the shameful society which treats women as objects. Society does not respect women's rights, it ignores their feelings and thus women are oppressed by patriarchal society. In line with the claim that men and women are equal, women are making progress in all fields like politics, economy, education, employment etc. This progress did not come easily. It is only after many travails that womanhood has reached its status. The sense of freedom that women should come out of slavery and the truth that they should seek the path of progress inspired women to create feminist literature. In this article, we will describe the position of women in one of the contemporary literature, Puthu kavithai.

**Keywords:** Feminism, Puthu kavithai, Feelings, Women

## முன்னுரை

மங்கையராக பிறப்பதற்கு நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா என்றார் கவிமணி. ஆணுக்கு பெண் சமம் என்ற கூற்றுக்கு இணங்க ஆணுக்கு இணையாய் பெண்களும் சமூகத்தில் அரசியல், பொருளாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இம்முன்னேற்றம் எளிதாக கிடைத்துவிடவில்லை. பல துன்பங்களுக்குப் பின்பே பெண்ணினம் என்ற நிலையை எட்டி உள்ளது. பெண்கள் அடிமை நிலையில் இருந்து வெளிவர வேண்டும் என்ற விடுதலை உணர்வும், முன்னேற்ற பாதையை தேட வேண்டும் என்ற சக்தியுமே பெண்களை இலக்கியம் படைக்கத்தூண்டியது. இந்த வகையில் தற்கால இலக்கியங்களில் ஒன்றான புதுக்கவிதையில் பெண்களின் நிலைப்பாட்டை கட்டுரையில் விவரிப்போம்.

## பெண்ணியம்

ஆங்கிலத்தில் 'Feminism' என்ற சொல்லுக்கு இணையாக பெண்ணியம் என்னும் சொல் வழங்கப்பட்டு வருகிறது. பெமினிசம் என்ற சொல்லுக்கு தமிழில் பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக் கொள்கை என்ற பல சொற்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பெண்ணை தாயாக கருவியாக, வேலைக்காரியாக, போக பொருளாக, இவ்வனைத்து நிலைகளிலும் பார்க்கும் ஆண் வர்க்கம் அவளுக்கும் ஒரு தனித்தவம் உள்ள பிறவி என்பதை மறந்து விடுகின்றது என்கிறார் தாரா அலிபெய்க் பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளை தருவது மட்டுமல்ல சமூகத்தையே மாற்றி அமைக்க முயல்வதாகும் என்று பெண்கள் உரிமைகள் பெறுவதைக் குறித்து சார்ல்ட் பன்ச் கூறுகிறார்.

இருப்பினும் சமூக அளவில் பெண்களைப் பற்றிய மதிப்பீடு ஆணுக்கு அடுத்த நிலையிலேயே அமைந்துள்ளது. இதனை உணர்ந்த மகளிர் தன்னிலை உணர்ந்து சமூக அளவில் தனது மதிப்பீடு ஆணுக்கு இணையாக இருக்க வேண்டும் என்பதில் உறுதி கொண்டனர். இதன் மூலம் சமூகத்தில் உள்ள அனைத்து மகளிரையும் ஒன்று திரட்டி உரிமை கோரி சமத்துவம் பெற இன்றைய புதுக்கவிதையை தங்களுக்கு தொடர்பு சாதனமாக நினைத்து அதில் தம் ஆற்றலை வெளிப்படுத்தி வருகின்றனர்.

## ஆண் பெண் சமம்

ஆணும் பெண்ணும் சமூகத்தின் இரு கண்கள் "வலிமை, முனைப்பு, வீரியம், ஆற்றலுடன் கூடிய அறிவு, போன்றவை எல்லாம் ஆணிடம் அதிகமாகவும், வளைந்து கொடுக்கும் மென்மை ,நயம், உயிரோட்டமான துடிப்பு, செயல்திறன், எழில் அனணத்துச் செல்லக்கூடிய அன்பு, எந்தக் கொடுமையிலும் உடைந்து விடாத உறுதி ஆகிய இயல்புகள்[1] பெண்ணிடம் மிகுதியாக இயற்கையிலேயே அமைந்துள்ளது. இவ்விரு ஆற்றலும் ஒன்றுபடும் போது மட்டுமே சமூக உயர்வினை அடைய முடியும் இதனை,

“ஆணும் பெண்ணும் சமநிலை பெற்றால்தானே

பூமிக்கு வாழ்வு

ஆணும் பெண்ணும் முரண்பட்டால்

ஏது பூமி” [2]

என்ற வரிகள் மூலம் ஆண் சமூகத்திற்கு பெண்ணினத்தின் உயர்வினை உணர்த்த முற்படுகிறார் கவிஞர்

## நம்பிக்கை

ஆணும் பெண்ணும் தம்முள் முரண்பாடு கொள்ளும் போது பெண் அடிமை நிலைக்கு ஆளாகிறாள். தன் சுயம் தொலைத்த பெண் தன்னை உயர்த்தி தன் திறமையை நிலைநாட்டி தான் எதிர்கொள்ளும் தடைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து முன்னேற தன்னம்பிக்கை நீரூற்றி தானும் உரமேற்றிக் கொள்கிறாள். இதனையே

"வாழ்வுக்காக நீ போராடுகையில் சரிவு வந்தால் சலித்து போகாதே, விழுந்து போகாமல் தாழ்ந்து நிற்காமல் நிமிர்ந்து கொள் இனி உதயங்கள் மட்டுமே உன் யாத்திரையில்"

என்ற வரிகள் மூலம் பெண்ணினத்திற்கு உணர்த்துகிறார். மேலும் துயரம் கண்டு துயரப்படாதே,

“புன்னகைக்கு திரை போடாதே புன்னகையை திரையாய் போட்டுப்பார்”

உன் வேதனைகள் வெள்ளியாய் மாறும் சோகம் கூட உனக்கு சாதகமாகும் ஆணாதிக்க அடக்கு முறையில் அமைதியாய் இருந்து அவதிப்பட்டது போதும்

"வாழாதிருந்தது போதும் நாம் வாளாய் இருப்பதே நியாயம்"

என்று உரிமை குரல் கொடுப்பதன் மூலம் பாரதிதாசனின் தமிழச்சியின் கத்தியாய் தன்னை உணர்கின்றார்கள் இன்றைய மகளிர்.

## பெண்ணின் மதிப்பீடுகள்

பெண்ணை தியாகச் செம்மலாய், தாயாய், மனைவியாய், சகோதரியாய், மகளாய், பார்க்கும் குடும்பமும் அழகு பதுமையாக விளம்பரப் பொருளாக இலக்கியத்தின் பாடுபொருளாக பார்க்கும் சமூகமும், பெண்ணை மனித இனத்தின் மறுபாதியாய் அறிவாற்றலில் ஆணுக்கு இணையாய் பார்ப்பதில்லை, இதனை உணர்ந்த இன்றைய மகளிர்,

"அழகு காட்டி அசத்த நினைக்கும் அழகு பதுமைகளா நீங்கள்

அறிவியல் உலகில் சாதனை நிகழ்த்தும் மறவியல் உயிர் அல்லவா நீங்கள்"

என்று தங்களுக்குள்ளேயே தன்னிலை உணர்த்தி அறிவியல் உலகில் சாதிக்கத் துடிக்கும் இன்றைய மகளிரின் பெண்ணிய பதிவினை கவிதைகளில் காண முடிகிறது.

## பெண்ணுரிமை

உரிமையாவது உயிர்களுக்கு கடவுளால் அளிக்கப்பட்ட ஒரு பெரும் இயற்கை கொடையாகும். பெண்கள் தங்கள் உரிமைகளை உணர்ந்தால் தான் விலங்கு நிலையில் இருந்து விடுபட்டு திகழ முடியும் என்று தாராபாரதி

"ஊமை பெண்களின் உதடுகளை திறந்தவளே"

என்று கூறியுள்ளார்.

மேலும்

"தரையெடுத்த வாழ்க்கையிலே

தாய் வயிறு பொன்வயிறு"

என்று தாய்மையின் மேன்மையை சுட்டியுள்ளார்.

குடும்ப வாழ்க்கையில் பெண்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைக்கும் உரிமை பெற்றவராக வாழ வேண்டும். ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் உரிமை இருக்க வேண்டும். இக்கருத்தை "குடும்பம் என்பது என்ன குழந்தைகள் அச்சகமா குடும்பத்தில் மனைவி பெறும் குழந்தை பெறும் எந்திரமா "என்ற கவிஞரின் கவிதை வரிகளால் அறிய முடிகின்றது.

## இட ஒதுக்கீடு

ஆணினத்தை எதிர்த்து மட்டுமல்ல தன்னினத்தை ஒன்றிணைத்து சாதனைகளை தொடர்ந்து நிகழ்த்தி வரும் இன்றைய மகளிர் இனம் சமூகத்திற்கும் ஒரு கேள்வி எழுப்புகிறது. பெண்ணினத்திற்கு 33 சதவீதம் இட ஒதுக்கீடு மசோதாவை இன்றுவரை நிறைவேற்ற விடாமல் தடுக்கும் ஆதாயம் தேடும் அரசியல் அமைப்புகளையும் சூழ்ச்சிகள் நிறைந்த சமூகத்தையும் கண்டு ஆவேசம் கொள்கிறது. பெண்ணின் சிந்தனை, அறிவாற்றல், படைப்பாற்றல், அரசியல் மதிநுட்பம் ,ஆளுமை போன்றவற்றை ஒதுக்கிவிட்டு இட ஒதுக்கீடு தர மறுக்கும் சமூகத்தின் மேல்

"சிதறினாலும் சிதறல்களும் கோள்களாகி

வீழ்ந்தும் மீண்டும் பிய்ந்த சதைகள்

ஒட்டி தழும்பு மறைத்து திரியும் வாழும்

கல்பனாக்களுக்கு தேவையில்லை அங்கீகாரம்"

என்று கோபக்கணை தொடுக்கிறாள். இக்கவிதை வரிகள் துணிவு கொண்ட பெண்ணினத்தின் ஆவணமாக திகழ்கிறது எனலாம்.

## முடிவுரை

மனித உரிமைகளோடு பெண்ணுரிமைகள் தொடர்புடையவை பெண்களுக்கான உரிமைகளின் பதிவுகளமாக கவிதை திகழ்கிறது. பெண்களை போக பொருளாக கருதும் சமுதாய அவமானம் என்று கவிதைகள் குறிப்பிடுகின்றன. சமூகத்தின் பெண்களின் உரிமைகளை மதிப்பதில்லை உணர்ச்சிகளை அலட்சியப்படுத்துகிறது கடமைகளை புறந்தள்ளுகிறது இதனால் பெண்கள் ஆணாதிக்க சமூகத்தால் ஒடுக்கப்பட்டு நசுக்கப்படுகின்றன. பெண்ணின் கற்பு பாதுகாப்பு இல்லாமல் போக பொருளாக கருதுவதை கண்டிக்கிறது. பெண்கள் மீதான இழிவு, வன்முறை படுகொலை, கற்பழிப்பு, பலவந்தம் போன்றவற்றை சட்டங்களால் மட்டுமே மாற்ற முடியாது. இதற்கு ஒரு சமுதாய மாற்றமே தேவை என்பதை கவிதைகள் சுட்டிக்காட்ட தவறவில்லை. ஆணதிக்க பெண் அடிமைத்தன உணர்வுகளை எதிர்க்கும் போராட்டம் மனித உரிமைகள் தழைத்து வளரக்கூடிய ஜனநாயக சமத்துவ சூழலுக்கான போராட்டமும் சமகாலத்தில் நடத்தப்பட வேண்டியவை அப்போதுதான் மனிதர்களாக வாழும் உரிமை பெண்ணுக்கு சாத்தியமாகும். இவ்வாறு இன்றைய இலக்கியங்களில் ஒன்றான புதுக்கவிதையில் மூலம் மகளிர் தன் நிலை உணர்ந்து சுயம் தேடி, புரட்சி செய்து, புத்துணர்வு பெற்றதையும், துன்பங்களால் சோர்ந்து போகும் தன் இனத்திற்கு ஆறுதல், நம்பிக்கை மற்றும் துணிவு கொண்ட ஆற்றல்மிக்க சக்திகளை அளித்து வருகிறது. மேலும் சமூகத்திற்கு தன்னிலை உணர்த்தவும், தங்களின் உரிமை பறிப்பு பெண் முன்னேற்றத்திற்கு என்ற வெற்றியினை இலக்கியங்கள் வழி வெளிப்படுத்தி உள்ளனர் இதன் மூலம் தங்களின் சமூக மதிப்புகளை உயர்த்திக்கொள்ள உரிமையுடன் கடமையை செய்து சாதனை படைக்கத் தனித்தன்மையுடன் திறம்பட இயங்க முடியும் என்பதை இக்கவிதைகள் உணர்த்துகின்றன.

## References


ராஜம் கிருஷ்ணன் பெண் விடுதலை பக்கம்- 45

ஜெ. செல்வகுமாரி பெண்ணியம் பேசுகிறேன் பக்கம்- 22

ராணி உயிரின் பிரவாகம் பக்கம் -26, 27

பத்மாவதி தாயுமானவன் .அடுப்பு வெளிச்சத்தில் பக்கம்- 57.

ஜெ.செல்வகுமாரி பெண்ணியம் பேசுகிறேன் பக்கம்- 49

திலகபாமா எட்டாவது பிறவி பக்கம்- 26



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License